## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 70. ஸ்ரீமான் போசல பாவா

பண்டரீபுரத்துக்கு அருகில் உள்ள சிறிய க்ராமம் தான் பால்கட்.அதில் வாழ்ந்த மிகப் பெரிய உழவர் தான் போசல பாவா.மிகவும் நன்றாக உழவுத் தொழில் செய்து, அதன் மூலம் வரும் வருவாயில் ஊருக்கும் பண்டரீபுரக் கோயிலுக்கும் பல கொடைகள் செய்தார்.

குறிப்பாக ஒவ்வொரு ஏகாதசிக்கும் அங்கு சென்று மறுநாள் துவாதசியில் மிகச் சிறந்த அன்ன தானம் செய்தார்.

பருவ மழை குன்றி மிகவும் வரட்சி தேசத்தில் ஏற்பட்ட போதும் இவர் விதைக்கு என ஒதுக்கி இருக்கும் தானியங்களைக் கொண்டு அன்னதானம் செய்தார்.

ஊரோடு இவரும் பெரும் பஞ்சத்தை அனுபவிக்க நேர்ந்த நிலையில் தன் வயல்களைக் கூட விற்க கதியில்லாமல் போக, விறகு வெட்டி விற்று அதில் வரும் வருவாயில் சோள மாவு வா'க்கி, ரொட்டிகள் செய்து துவாதசி பாரணை அன்னதானம் செய்வார்.ஆனால் அறுசுவை உணவை உண்ட போலி அன்பர்கள் சோள ரொட்டியைச் சுவைக்க வருவதாக இல்லை.

**முதிய தம்பதிகளுக்குள் ஈசன்**

ஒரு முறை மிகவும் பசியால் சாக இருந்த முதிய தம்பதிகளுக்கு இவர் சோள ரொட்டி சுட்டு உயிர் காப்பாற்றினார்.அப்போது அவருக்கு அக்கிழவி தான் உண்ட மீதியை அளித்து அதையே ப்ரசாதமாக உண்ணும் படி வேண்டிட, அவரும் வீடு திரும்பி மனைவியுடன் அதை உண்ண அமிர்தம் போல் சுவைத்ததாம்.அத்தம்பதியினரின் தெய்வீக ஆற்றலை உணர்ந்து அவர்களுள் இருக்கும் சத்யத்தை இவர்கள் போற்றினர்.

**வரிப்பணம் செலுத்திய சீட்டு**

மீண்டும் பருவ மழை பெய்து விவசாயம் வளர்ந்த போது இவர் சதா பாண்டுரங்க பஜனைகளில் லயித்து இருந்த காரணத்தால் இவரது விளைச்சல் நிலத்தில் இருந்த பொருட்களைக் கள்வர்களும் பறவைகளும் தூக்கிச் சென்றனர்.

விவசாயம் மூலம் பெறும் வருவாயில் குறிப்பிட்ட பங்கைக் கட்டச் சொல்லி அரசன் உத்தரவு வர, இவர் பணம் இன்றி அமைதியாக இருக்கிறார்.ஊருக்கும் தேசத்திற்கும் தர வேண்டிய வரிக்கு ஈடாகத் தன் வயல்களில் விளைந்த

எல்லாவற்றையும் அளித்த போது, பண்டரீநாதன் மக்கள் மனதில் இவரது திவ்ய பக்தியை உணர்த்தி அவருக்கு உரிய வரியை collect செய்து கட்ட வைத்தான்.

பண்டரீபுர மூலவர் இடுப்பில் அரசனுக்குச் செலுத்திய வரிப்பணச்சீட்டு இருக்க அனைவரும் கண்டு இவரது பக்தியைப் போற்றினர்.இவருக்கு சித்திகள் இருப்பதாக மக்கள் நம்பினர்.

**இறந்தவனை எழுப்பிய பாவா**

ஒரு ஏகாதசியின் போது பஜனை நிகழ்கிறது.அப்போது ஒருவனுக்கு இதயவலி வந்து இறந்து போனான்.அவனைத் தூக்கிக் கொண்டு இவர் வீட்டின் முன் வைத்து ப்ரார்த்தனை செய்ய, வெளியே வந்த போசல பாவா, ”**என்னப்பா எழுந்திரு விரைவில் பண்டரீபுரம் போகலாம்**!” என்று சொல்லித் தன் பஜனையை ஆரம்பிக்க, அவன் எழுந்தானாம்.

வாழ் நாள் முழுவதும் தம்பதிகள் விவசாயம் செய்தும், அன்ன தானம் தந்தும் பண்டரீநாதனின் சேவையில் ஒன்றி அவனடி சேர்ந்தனர்.

ஹரி ஓம்!